**பாடம் - நாடகமும் அரங்கியலும்**

**வாரம் 03**

**தரம் - 12**

**ஆசிரியை : G.சிசிலகுமாரி (BFA Hons)**
**இ/ ஸ்ரீ. கிருஷ்ணா தமிழ் மகா வித்தியாலயம்**

**தேர்ச்சி : சமூகப் பண்பாட்டுப் பின்புலத்தில் சுதேச மற்றும் சர்வதேச அரங்கு செல்நெறிகள் பற்றி ஆராய்வார்.**

- நாடகக்கலை அனைத்து நாடுகளிலுமே சமயச்சார்பான நடனங்களில் இருந்து பிறந்து வந்துள்ளது என்பது யாவரும் அறிந்த உண்மையே. தமிழ் நாடக வளர்ச்சியும் இதற்கு விதிவிலக்கன்று.
- சங்ககாலம், “கதை தழுவிய கூத்து” “நாடகம்” என்கின்றது.

1. தமிழகத்தில் 600 க்கு முற்பட்ட காலத்தில் நிலவிய கரண நிலைப்பட்ட ஆடல்களை குறிப்பிட்டு விளக்குக.
2. சங்க காலத்தில் காணப்பட்ட நாடகம் சார் பண்புகளை உதாரணங்களுடன் எடுத்துக்காட்டுக.
3. தமிழக நாடக வளர்ச்சியின் இரு பெரும் கட்டங்களையும் குறிப்பிடுக.
4. சங்கமருவிய காலத்தில் எழுந்த இலக்கியங்களுள் “சிலப்பதிகாரம்” அக்கால நாடகக் கலை பற்றி நன்கு கூறுகின்றது. இதனை ஆராய்க.

"தொழில் பயன் கருதிச் சுவைப்பது சுவையே"

"சுவைப்பயன் சுவைப்பச் சுவையுறல் வேத்து"

"பார்ப்பது பொதுவியல் படைப்பது வேத்து"

"நடப்பது பொதுவியல் நடிப்பது வேத்து"

"உள்ளது பொதுவியல் உள்ளதை விரித்துக்

கற்பனை காட்டும் கனவது வேத்து" ( கூத்தநூல் )

1. வேத்தியல், பொதுவியல் என்பதன் மூலம் நீர் விளங்கிக்கொள்வது யாது?
2. மாதவி ஆடிய 11 ஆடல்களையும் குறிப்பிட்டு விளக்கம் தருக.
3. சங்கமருவிய காலத்தில் காணப்பட்ட ஆற்றுகை முறைமைகளை ஆதாரங்களுடன் விளக்குக.

1. தமிழக அரங்க வளர்ச்சிப் போக்கின் கட்டங்களை குறிப்பிட்டு அக்காலங்களில் நாடகங்கள் நிகழ்த்தப்பட்டமைகான காரணங்களை ஆராய்க.
2. தமிழக அரங்கில் கி. பி 1800 க்கு முன்பும் பின்பும் அரங்க நிகழ்த்துகையில் ஏற்பட்ட மாற்றங்களை விபரிக்குக.
3. தமிழக அரங்க வரலாற்றில் கி. பி1800 க்கு பிற்பட்ட காலத்தில் காணப்பட்ட ஆற்றுகை முறைமைகளை எடுத்துக்கூறுக.
4. கி. பி 1800க்கு முன்பும் பின்பும் உள்ள கலைஞர்களை குறிப்பிட்டு அக் கலைஞர்கள் பெற்ற பரிசில்களையும் கௌரவிப்புக்களையும் குறிப்பிடுக.

பின்வருவனவற்றை சிறுகுறிப்பு எழுதுக.

1. சங்க காலத்தில் நிகழ்த்தப்பட்ட விழாக்கள்.
2. சங்க காலத்தில் நாடக கலைஞர்கள்.
3. தமிழகத்தில் ஐரோப்பியர் வருகையின் பின்னரான செயற்பாடுகள்.
4. நாயக்கர் காலத்தில் எழுந்த நாட்டுப்புற நாடகங்கள்.
5. கீர்த்தனை நாடகங்கள்.
6. தமிழகத்தில் தெருக்கூத்து